**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092311

1. District : மதுரை
மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு,
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 15/19
மு.த.அ. எண்
Date: 10.07.2019
நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: ஊ.த.க.சட்டம் 1988 Sections பிரிவுகள்: as amended by the
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of corruption (amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை ① 04.07.2019 ② 08.07.2019 at 12.30hrs ③ 09.07.2019 at 13.00hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை —

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.07.2019
Time நேரம் 09.00 மணி

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.07.2019
Time நேரம் 09.30 மணி

4. Type of Information : Written/ Oral ;
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 28 கி.மீ கிழக்கு
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address : கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் 69, வேப்படப்பு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : சி. ஆண்டிச்சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : சின்னகருப்பன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம்
தொழில்
(g) Address : வேப்படப்பு (ஒ) கிடாயம்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) அ. மணிமேகலை, 69, வேப்படப்பு, கிராம நிர்வாக அலுவலர், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போனப்பட்ட / ஈடுபட்டுள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவுபோனப்பட்ட / ஈடுபட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........ Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே கண்ட முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகிறது ........................ பதவி .................... நிலை பணியாளர் புலன்விசாரணை மேற்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலன்விசாரணைக்கு [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை முறையீட்டாளர் / தகவல் கொடுத்தவருக்கு படித்துக்காட்டப்பட்டு, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொண்டபின், அதன் நகல் இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/7/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
முறையீட்டாளர் / தகவல் கொடுத்தவரின் ஒப்பம் / கைரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
10.07.2019 at 10.05 hrs.

Name: பெயர் த. சூரியகலா,
Rank: பதவி ........ No. எண் ........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
மதுரை (10.07.2019

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 10.07.2019-ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நான் (T.சூரியகலா, காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, மதுரை) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வேப்படப்பு (எ) கட்டையம்பட்டி, சின்னகருப்பன் மகன் ஆண்டிச்சாமி என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வான புகார் கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், சி.ஆண்டிச்சாமி, த/பெ சின்னக்கருப்பன், வேப்படப்பு (எ) கட்டையம்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் வேப்படப்பு கிராமத்தில் குடும்பத்துடன் இருந்து விவசாயம் செய்து பிழைத்து வருகிறேன். எனது மனைவி வெள்ளைத்தாயி பெயரில் வேப்படப்பு கிராம சர்வே எண் 370/37-க்கு உட்பட்ட சுமார் 3 சென்ட் கிராம நத்தம் மனையிடத்தை எங்கள் ஊர் முருகேசன் மனைவி போதும்பொண்ணு என்பவரிடமிருந்து கிரையம் முடித்து, பின்பு கடந்த 25.06.2019-ம் தேதியன்று மேலூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண் 3313/2019-ன் கீழ் பத்திரம் ஒன்று பதிவு செய்தேன். கடந்த 02.07.2019-ம் தேதி கிராம நிர்வாக அலுவலகத்தில் என் மனைவியின் பெயரில் கிரையம் முடித்த இடத்துக்கு கைச்சிட்டா வாங்கினேன். அதன் பின்னர், எனது மனைவி பெயரில் வாங்கியுள்ள மனைக்கு அவரது பெயரில் பட்டா வேண்டி கடந்த 04.07.2019-ம் தேதியன்று எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை என்பவரை அலுவலகத்தில் நேரில் சந்தித்து விவரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம், கிராம நத்தம் என்றால் இணையம் வழியாக பட்டா மாறுதல் மனுச் செய்ய முடியாது, அந்த மனுவை நிரப்பி பத்திர நகல் இணைத்து அத்துடன் ரூ.5,000/- பணமும் கொண்டுவரச் சொன்னார். நான் அவரிடம் எதற்கு அவ்வளவு பணம் என்று கேட்டேன், அதற்கு அவர் உங்களுக்காக குறைத்து சொல்லியிருக்கிறேன், திங்கள்கிழமை மனுவுடனும், பணத்துடனும் வாருங்கள், விரைவில் பட்டா வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். அதன் பின்னர், இணைய வழி பட்டா மாறுதல் விபர படிவத்தில் முழுபுலம் பட்டா மாறுதல் வழங்குமாறு மனுவை நிரப்பி அதில் என் மனைவியின் கையெழுத்து வாங்கி, அத்துடன் எனது மனைவியின் பெயரில் கிரையம் முடித்த பத்திர நகல், மூலப்பத்திர நகல், வில்லங்கச் சான்று, கைச்சிட்டா நகல், எனது மனைவியின் ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கடந்த 08.07.2019-ம் தேதியன்று மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து மனுவைக் கொடுத்தேன். எனது மனுவை கிராம நிர்வாக அலுவலர் வாங்கிப் பார்த்த பின்னர் எல்லாம் சரியாக உள்ளது, பணம் ரூ.5,000/- எங்கே என்று கேட்டார். நான் அவரிடம் நீங்கள்

கேட்கும் தொகை அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன், அதற்கு அவர் 5,000/- ரூபாய் இல்லையென்றால் உங்கள் வேலையை முடிக்க முடியாது என்று சொன்னார். வேறு வழியில்லாமல் நான் அவரிடம் தற்போது பணம் புரட்ட முடியவில்லை, மனுவை அனுப்பி வேலையை முடித்த பின்னர் பட்டா வாங்கும் போது பணம் தருகிறேன் என்று சொன்னேன், அதற்கு அவர் பணம் கொடுத்நால் தான் மனுவை மேலே அனுப்பி வேலையை முடிக்க முடியும், அதுவரை மனு என்னிடம் தான் இருக்கும் என்றும், நீங்கள் 5,000/- ரூபாய் கொடுத்தால்தான் மனுவை அனுப்பி வைப்பேன் என்றும் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். என்னால் அவர் கேட்ட பணத்தைப் புரட்ட முடியவில்லை. இந்நிலையில், நேற்று 09.07.2019-ம் தேதியன்று மதியம் சுமார் 01.15 மணியளவில் திருமதி.மணிமேகலை எனது செல்போனில் தொடர்பு கொண்டார். அப்போது நான் வண்டி ஓட்டி கொண்டிருந்ததால் போனை எடுக்க முடியவில்லை. எனவே எனது டூ வீலரை நிறுத்தி விட்டு வீஏஓ மணிமேகலை அழைத்திருந்த தொலைபேசி எண்ணிற்கு நான் தொடர்பு கொண்டேன் அப்போது அவர் பணம் கொண்டு வருவதாகச் சொன்னீர்களே, வரவில்லையா என்று கேட்டார், நான் அவரிடம் பணம் இன்னும் தயாராகவில்லை என்று சொல்லி போனை வைத்து விட்டேன். ஆனால், அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனது மனைவியின் பெயரில் உள்ள மனையிடத்துக்கு அரசு இலவசமாக வழங்கும் பட்டாவைப் பெற்றுத் தர என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் வேப்படப்பு கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/- மற்றும் 08.07.2019-ஆம் தேதியன்று எனது மனுவுடன் இணைத்துக் கொடுத்த கிரையப் பத்திர நகல், அதன் மூலப்பத்திர நகல், வில்லங்கச் சான்று, கைச்சிட்டா நகல், எனது மனைவியின் ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகிய ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) சி.ஆண்டிச்சாமி 10.07.19. Sir, received the written complaint on 10.07.2019 at 09.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance & Anti-Corruption wing, Chennai and I registered a case in Madurai Vigilance & Anti-Corruption in Cr. No. 15/2019 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.30 hrs and took up investigation Sd./-XXXXXX (T.Suriyakala) 10.07.19, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR, original written complaint of Tr. C.Andichamy s/o Chinna karuppan. Veppatappu (a) Kattayampatti, Melur Taluk, Madurai district along with the documents enclosed by the complaint is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai. The amount of Rs.5,000/- brought by the Complainant Tr.C.Andichamy was returned to him for further trap proceedings.

(T.Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.